**DEPOSITION OF WITNESS**
**(Chapter X X I I I Code of Criminal Procedure)**
- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -
**IN THE COURT OF DISTRICT MUNSIF -**
**CUM JUDICIAL MAGISTRATE**
**THIRUPPUVANAM**

Calender Case :
Miscellaneous : Case No: CC **.No. 16/2019**
Preliminary Register :
Sessions :
Deposition of Witness for Prosecution : PW6
Defendant :
Court :

Name : ஜானகிராம் – காவல் கண்காணிப்பாளர் (ஓய்வு)
Father's Name : பெருமாள்
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of

---

27.02.2026. **CC.No.16/2019** அ.சா.6 ஜானகிராம் – காவல் கண்காணிப்பாளர் (ஓய்வு)

( 5, 11, 12 வது எதிரிகள் ஆஜர். 2, 6 முதல் 9, 15 வது எதிரிகள் ஆஜர் இல்லை. U/s. 355 BNSS Petition Filed and Allowed. அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர், எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் )

**முதல் விசாரணை:**

1) நான் இறுதியாக சென்னை ஆவடி ஆர்.சி. பெட்டாலியனில் தளவாய் ஆக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்று தற்போது செங்கோட்டையில் குடியிருந்து வருகிறேன். கடந்த 04.05.1999 ம் தேதி நான் திருப்புவனம் காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது திருப்புவனம் காவல் நிலைய குற்ற எண். 160/1999 இதச பிரிவுகள் 147, 323, 332, 353 இதச வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த தலைமைக் காவலர் 1188 திரு.பிச்சாண்டி என்பவரிடமிருந்து வழக்கு விசாரணைக்காக வழக்கு கோப்பினை நான் பெற்று கடந்த 07.05.1999 ம் தேதியன்று மேற்படி வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு மதியம் 13.00 மணிக்கு சம்பவ இடத்தை சாட்சிகள் முருகேசன், துரைசிங்கம் ஆகியோர்கள் முன்பு பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **மேற்படி மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

2) அன்றைய தினம் சாட்சிகள் தலைமைக்காவலர் 122 திரு.நரசிங்கம்,

R VENKADESH PRASANTH Digitally signed by R VENKADESH PRASANTH Date: 2026.02.27 16:40:28 +0530

ARPC 1508 திரு.ராஜன், முதல் நிலைக்காவலர் 1302 திரு.வெள்ளைத்துரை, முதல் நிலைக்காவலர் 1267 திரு. மதியழகன், சாட்சி VAO திருப்புவனம் புதூர் முருகேசன், சாட்சி கிராம உதவியாளர் துரைசிங்கம் ஆகியோர்களை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். பின்பு 18.05.1999 ம் தேதி சாட்சி தலைமைக்காவலர் 1188 பிச்சாண்டி என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

3) கடந்த 01.06.1999 ம் தேதியன்று இந்த வழக்கில் காயம்பட்ட வாதி நரசிங்கம் என்பவருக்கு காயச்சான்று பெற்றேன். **நரசிங்கம் என்பவரது காயச்சான்று அ.த.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. இந்நிலையில் நான் பணிமாறுதல் பெற்று மதுரை மாநகருக்கு சென்றதால் வழக்கு கோப்பினை ஆய்வாளர் திரு.முருகேசன் வசம் ஒப்படைத்தேன். **ஆய்வாளர் திரு.முருகேசன் இறந்துவிட்டதால் துரித விசாரணை மற்றும் நீதியின் நலன் கருதி அவரது பகுதியையும் சேர்த்து நான் சாட்சியம் அளிக்கிறேன்.**

4) காவல் ஆய்வாளர் திரு.முருகேசன் இவ்வழக்கினை மேல் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு கடந்த 01.02.2000 ம் தேதியன்று AR போலீஸ் திரு.ராஜன் என்பவரது காயச்சான்று பெற்றுள்ளார். **மேற்படி ராஜன் என்பவரது காயச்சான்று அ.த.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்பு நரசிங்கம், ராஜன் ஆகியோர்களுக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் விஜயக்குமார் என்பவரை விசாரணை செய்து அன்றைய தினமே வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். எதிரிகள் அனைவரும் தலைமறைவாக இருந்த காரணத்தினால் அவர்களை நானோ ஆய்வாளர் திரு.முருகேசன் என்பவரோ கைது செய்ய இயலவில்லை.

5) அதன் பின்பு காவல் ஆய்வாளர் திரு.முருகேசன் தனது விசாரணை முடித்துக்கொண்டு எதிரிகள் மீது இதச பிரிவிகள் 147, 332, 353 ன் கீழ் 01.02.2000 ம் தேதியன்று சிவகங்கை நீதித்துறை நடுவர் எண்.2, சிவகங்கையில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u> :

1) இவ்வழக்கின் சம்பவங்கள் அனைத்தும் தெரிந்து புலன் விசாரணை செய்ததன் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். சம்பவமானது எத்தனை மணிக்கு நடைபெற்றதாக முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் கடந்த 03.05.1999 ம் தேதி இரவு 09.30 (21.30) மணிக்கு நடைபெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது. புகாரானது 04.05.1999 ம் தேதியில் இரவு 07.45 மணிக்கு கொடுக்கப்பட்டுள்ளதாக முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

R VENKADESH PRASANTH
Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2026.02.27 16:40:37 +0530

2) புகாரானது ஒரு நாள் காலதாமதமாக கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடமானது திருப்புவனம் காவல் நிலையம் முன்பு என்றால் சரிதான். காலதாமதத்திற்கு காரணமாக முதல் தகவல் அறிக்கை காலம் 8ல் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான் திருப்புவனம் நகரில் சம்பவத்தன்று கலவரமாக இருந்ததால் மறுநாள் புகார் கொடுத்தாக எனது விசாரணையில் வாதி குறிப்பிட்டுள்ளார். மேற்படி விசயங்களை வாதி புகார் மனுவில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

3) சம்பவத்தில் ஈடுபட்டதாக சொல்லப்படும் நபர்கள் இனம் தெரிந்த பெயர் தெரியாத 150 நபர்கள் என முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இவ்வழக்கின் எதிரிகள் பெயர் எதுவும் முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் எத்தனை நபர்களை எதிரிகளாக சேர்த்துள்ளேன் என்றால் 15 நபர்களை சேர்த்துள்ளேன். மேற்படி 15 நபர்களை எதன் அடிப்படையில் சேர்த்தேன் என இறுதி அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான் ஆனால் எனது புலன் விசாரணையில் சாட்சிகளின் வாக்குமூலத்தில் எதிரிகளின் பெயரைக் குறிப்பிட்டதன் அடிப்படையில் எதிரிகளை சேர்த்துள்ளேன்.

4) சம்பவ சமயத்தில் திருப்புவனத்தில் அரசு மருத்துவமனை இருந்தது என்றால் சரிதான். காயம்பட்ட நபர்கள் சம்பவ தினத்திற்கு மறுநாள் 04.05.1999 ம் தேதி இரவு 09.15 மணிக்கு தான் மருத்துவமனை சென்றதாக விபத்து பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எதிரிகள் சம்பவத்தில் ஈடுபட்டதாக சாட்சிகளுக்கு யார் தகவல் சொன்னார்கள் என்பது குறித்து எனது விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் திருப்புவனத்தில் பணிபுரியும் தனிப்பிரிவு காவலர் என்பதால் அவருக்கு தகவல் தெரியும் என்று எனது விசாரணையில் தெரிந்து கொண்டேன்.

5) காயம்பட்ட நபர்களுக்கு ஏற்பட்ட காயமானது எந்த எதிரியால் ஏற்படுத்தப்பட்டது என்பது குறித்து எனது விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் குறிப்பிட்டு எந்த எதிரி என சாட்சிகள் தங்களது வாக்குமூலத்தில் கூறவில்லை. இந்த வழக்கில் புகார் கொடுத்தவர் காவலர் என்றாலும், இவ்வழக்கில் சேர்க்கப்பட்டுள்ள சாட்சிகள் அனைவரும் காவலர்கள் மற்றும் அரசு ஊழியர்கள் என்றாலும் சரிதான். இவ்வழக்கில் தனிநபர் சாட்சிகள் யாரும் சேர்க்கப்படவில்லை என்றால் சரிதான் தனிநபர்கள் யாரும் சாட்சியம் அளிக்க முன்வராததால் தனிநபர்களை சாட்சியாக சேர்க்கவில்லை.

6) பார்வை மகஜர் எத்தனை மணிக்கு தயார் செய்யப்பட்டது என்றால் கடந்த 07.05.1999 ம் தேதியில் மதியம் 01.00 மணியளவில் தயார் செய்யப்பட்டது. மதியம் 01.00 மணி என்பது திருப்புவனம் காவல் நிலைய பகுதியில் மக்கள்

R VENKADESH PRASANTH
Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2026.02.27 16:40:45 +0530

நடமாட்டம் உள்ள நேரம் தான் என்றால் சரிதான். திருப்புவனம் காவல் நிலையம் அருகில் சம்பவ சமயத்தில் கடைகள், குடியிருப்புகள், பத்திர அலுவலகம் இருந்தன என்றால் சரிதான். தனிநபர் சாட்சிகள் யாரும் முன்வரவில்லை என்பது குறித்து எனது விசாரணை அறிக்கையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான் எனது வழக்கு நாட்குறிப்பில் பகுதி 1ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

7) மேற்படி எனது நாட்குறிப்பை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் பொதுவாக நாட்குறிப்பை தாக்கல் செய்வது கிடையாது. இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையை எப்போது எத்தனை மணிக்கு நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது என்றால் 04.05.1999 ம் தேதி அனுப்பப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது நேரம் குறிப்பிடப்படவில்லை. நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ள முதல் தகவல் அறிக்கையில் 05.05.1999 ம் தேதி காலை 10.00 மணிக்கு பெறப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

8) சம்பவத்திற்கு முன்பு திருப்புவனம் காவல் நிலையத்தில் ஜெகதீசன் என்பவர் காவல் நிலைய விசாரணையின் போது காவல் நிலையத்தில் மரணம் அடைந்துவிட்டார் என்றால் அது சம்பந்தமான ஆவணங்களை பார்த்தால் தான் சொல்லமுடியும். எனது புலன் விசாரணையில் காவலர் வெள்ளைத்துரை என்பவரை நான் விசாரணை செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வெள்ளைத்துரை தனது புலன் விசாரணை வாக்குமூலத்தில் எனது புலன் விசாரணையில் திருப்புவனம் நகரில் நடந்த கலவரம் சம்பந்தமாக கைது செய்து கொண்டுவரப்பட்ட கைதி ஜெகதீசன் என்பவர் உடல்நிலை சரியில்லாமல் இறந்தது சம்பந்தமாக சட்டம் ஒழுங்கு பிரச்சனை ஏற்படாமல் இருக்க திருப்புவனம் காவல் நிலையம் முன்பு பாதுகாப்பு பணியில் இருந்ததாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான்.

9) மேற்கண்ட விசயங்களை காவலர் ராஜனும் எனது விசாரணையில் வாக்குமூலமாக கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி ஜெகதீசன் இறந்தது சம்பந்தமாக திருப்புவனம் காவல் நிலையத்தில் 20 வழக்குகளுக்கு மேல் திருப்புவனம் மற்றும் அதன் சுற்று வட்டார பகுதியைச் சேர்ந்தவர்கள் மீது பதிவு செய்யப்பட்ட விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். பல வழக்குகள் பதிவு செய்யப்பட்டன குறிப்பிட்டு எண்ணிக்கை தெரியாது.

10) லாடனேந்தல் கிராமத்தைச் சேர்ந்த ஜெகதீசன் என்பவர் காவல் நிலைய லாக்கப்பில் போலீசாரால் துன்புறுத்தப்பட்டு இறந்துவிட்டதால் மேற்படி இறப்பினை மறைப்பதற்காக திருப்புவனம் மற்றும் திருப்புவனம் சுற்று வட்டார பகுதியைச் சேர்ந்த நபர்கள் மீது 20 க்கும் மேற்பட்ட பொய்யான குற்ற வழக்குகள் பதிவு செய்யப்பட்டன என்றால் சரியல்ல. மேற்படி 20 வழக்குகளில் இந்த

R VENKADESH PRASANTH
Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2026.02.27 16:40:55 +0530

வழக்கும்  ஒன்று என்றால் சரியல்ல. வழக்கு சம்பவமானது எங்கள் காவல் நிலையத்திற்கு முன்பு சுமார் 50 மீட்டர் தொலையில் நடைபெற்றது என்றால் சரிதான். உண்மையிலேயே காயம்பட்ட காவலர்கள் எதிரிகளால் தாக்கப்பட்டிருந்தால் உடனடியாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருப்பார்கள் என்றால் சரியல்ல.

11) சம்பவம் நேரம் இருள் சுழ்ந்த நேரம் என்றால் இரவு நேரத்தில் சம்பவம் நடைபெற்றது. ஆனால் சம்பவ இடத்தில் விளக்கு வெளிச்சம் உள்ளது. சம்பவ இடத்தில் விளக்கு வெளிச்சம் எதுவும் இல்லை என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

12) உண்மையிலேயே வழக்கு சம்பவம் நடைபெற்றிருந்தால் உடனடியாக புகார் கொடுத்து மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்திருப்பார்கள் என்றால் சரியல்ல. ஜெகதீசன் இறப்பில் இருந்து என்னுடன் பணியாற்றிய காவலர்களை காப்பற்றுவதற்காக எதிரிகள் மீது நடக்காத சம்பவத்தை நடந்ததாக பொய்யாக வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சாட்சிகள் அனைவரும் அரசு ஊழியர்கள் என்பதால் அரசு தரப்பிற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் கைப்பற்றபடவில்லை என்றால் சரிதான்.

13)  நான் சொன்னது போல் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சொன்ன விதத்தில் எந்த சம்பவமும் நடைறெவில்லை என்றாலும் வழக்கு ஆவணங்கள் அனைத்து இவ்வழக்கின் தோதிற்கேற்ப காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல. காயம் ஏற்பட்ட நபர்களுக்கு ஏற்பட்ட காயமானது தன்னிச்சையாக ஏற்பட்டதே தவிற இந்த எதிரிகளால் காயம் ஏதும் ஏற்படுத்தப்படவில்லை என்றால் சரியல்ல. இந்த எதிரிகளுக்கும் வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றாலும் எதிரிகள் எவ்வித குற்றச் சம்பவத்திலும் ஈடுபடவில்லை என்றாலும் சரியல்ல.

Taken down by me in open court readover/ interpreted to the witness in Tamil and acknowledged by him/ her to be correct.

R VENKADESH PRASANTH

Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2026.02.27 16:41:03 +0530

District Munsif Cum Judicial Magistrate,
Thiruppuvanam.